-/12/2/94

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ   அதிவிசேஷமானது   EXTRAORDINARY

අංක 796/6 – 1993 දෙසැම්බර් 08 වැනි බදාදා – 1993.12.08

796/6 ஆம் இலக்கம் — 1993 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை

No. 796/6 – WEDNESDAY, DECEMBER 08, 1993

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.)   (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)   (Published by Authority)

பகுதி I : தொகுதி (I) — பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. — பி 21/78 III.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 140 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1993 திசெம்பர் 01.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகக் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றிமூன்றாம் ஆண்டு பெப்புரவரி 15 ஆம் தேதிய 755/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவக (திருத்தக்) கட்டளைச்சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1980 ஏப்பிறல் 10 ஆம் தேதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டமானது பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அதன் 13 ஆம் பந்தியில், அப்பந்தியின் (ஞ) என்னும் உட்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :—

> “ (ட) மருத்துவ நிருவாகம் ”.

(2) அதன் 14 ஆம் பந்தியில் —

(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் (உ) என்னும் வாசகத்தின் இறுதியில் பின்வரும் புதிய வாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் :—

> “ (ஊ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ, பல் வைத்திய பீடங்கள் ஒவ்வொன்றினதும் பீடச் சபைகள், இவ்வுட்பந்தியின் (ஈ) அத்துடன் (உ) எனும் வாசகங்களின்கீழ் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்ய இயலாதிருக்குமிடத்து அத்தகைய பீடச் சபைகள் வைத்தியசாலை உசாத்துணைப் பணியாட்டொகுதியின் பகுதி நேர ஆசிரியரிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யலாம். ”

(ஆ) அதன் (2) ஆம் உட்பந்தியின் (ஈ) என்னும் வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

> “(ஈஈ) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ, பல் வைத்திய பீடங்கள் ஒவ்வொன்றினதும் பீடச் சபைகள் இவ்வுட்பந்தியின் (இ) அத்துடன் (ஈ) என்னும் வாசகங்களின்கீழ் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்ய இயலாதிருக்குமிடத்து அத்தகைய பீடச் சபைகள் வைத்தியசாலை உசாத்துணைப் பணியாட்டொகுதியின் பகுதி நேர ஆசிரியர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யலாம் ”.

(3) பந்தி 25 ல் அதிலுள்ள “ மருத்துவக் கல்விச் சிறப்பறிவு ” என்பதன் வரைவிலக்கணத்தில் “ பல் அறுவை வைத்தியமும் உடநல விஞ்ஞானமும் ” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ பல் அறுவை வைத்தியம், மருத்துவ நிருவாகம் அத்துடன் உடநல விஞ்ஞானம் ” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.